**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, RAJAPALAYAM**
**(CHAPTER XXIII CODE OF THE CRIMINAL PROCEDURE)**
CC 163/2016
**01-07-2026**
**Deposition of Witness fro : P.W.3**

| Name : | ரகுராம் | Village | |
|---|---|---|---|
| Father's /Husband Name : | பலவேசம் | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Act 44 of 1969) of the day of **:01-07-2026**

(எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

**அரசு தரப்பில் முதல் விசாரணை –**

நான் தளவாய்புரத்தில் வசிக்கிறேன். நான் ஆட்டோ ஓட்டி வருகிறேன். எனது அக்கா முத்து லட்சுமி இறந்து விட்டு இருந்தார். அவருடைய பிரேத பரிசோதனை அறிக்கை பெறுவதற்காக நான் காவல் நிலையத்திற்கு அலைந்து கொண்டு இருந்தேன். அப்போது என்னிடம் போலிசார் கையொப்பம் வாங்கினார்கள். பார்வை மகசரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். **பார்வை மகசரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் அ.சாஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரணைசெய்யவில்லை.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்க கோரி அனுமதி கோரப்பட்டது. அனுமதி அளிக்கப்பட்டு சாட்சி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

போலிசார் விசாரணையில் கடந்த 14-11-2015 தேதியன்று தளவாய்புரம் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் குற்ற எண் 597 /2015 வழக்கின் சம்பவ இடத்தை என் முன்னிலையிலும் மணிகண்டன் என்பவர் முன்னிலையிலும் வரைபடம் வரைந்து பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்றும் அந்த பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடத்தில் நானும் மணிகண்டன் என்பவரும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம் என்று போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரியை காப்பாற்ற வேண்டி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இராஜபாளையம்.

**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, RAJAPALAYAM**
**(CHAPTER XXIII CODE OF THE CRIMINAL PROCEDURE)**
**CC 163/2016**
**01-07-2026**
**Deposition of Witness fro : P.W.2**

| Name : | கண்ணன் | Village | |
|---|---|---|---|
| Father's /Husband Name : | பிச்சைவேல் | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Act 44 of 1969) of the day of **:01-07-2026**

(எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

**அரசு தரப்பில் முதல் விசாரணை –**

நான் சேத்துாரில் வசிக்கிறேன். நான் பிரவீன் டிராவல்ஸ் வைத்து உள்ளேன். சேத்துாரில் மாரியம்மன் கோவில் தெருவில் டிராவல்ஸ் வைத்து உள்ளேன். அ.சா,.1 யை எனக்கு தெரியும். சம்பவம் குறித்து எனக்கு தெரியாது. இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை. நான் 2015 ம் ஆண்டு வாக்கில் சேத்துார் ஆட்டோ ஸ்டாண்டில் ஆட்டோ ஒட்டி கொண்டு இருந்தேன். பொதுவாக ஸ்டாண்டிற்கு செல்லமாட்டேன். போன் சவாரியில் ஒட்டுவேன்.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்க கோரி அனுமதி கோரப்பட்டது. அனுமதி அளிக்கப்பட்டு சாட்சி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

போலிசார் விசாரணையில் கடந்த 13-11-2015 ம் தேதியன்று காலையில் எங்கள் ஆட்டோ ஆட்டோ ஸ்டாண்டில் ஆட்டோ ஒட்டும் மாரியப்பனுக்கும், சாமிராஜ் என்பவருக்கும் வாய்தகராறு ஏற்பட்டது என்றும், நாங்கள் சண்டையை விலக்கி விட்டோம் என்றும் பின்னர் மாலை 4.15 மணி அளவில் நானும் ராம்குமார் என்பவரும் தளவாய்புரம் சவாரிக்கு சென்று இருந்தோம் என்றும் அப்போது மாரியப்பன் ஆனந்தா கடை முன்பு நின்று கொண்டிருந்தார் என்றும் அப்போது மினிபஸ் டிரைவர் சாமிராஜ் பஸ்சை நிறுத்தி மாரியப்பனை பார்த்து அசிங்கமாக திட்டினார் என்றும், மேலும் சாமிராஜ் கையில் வைத்து இருந்த கம்பியால் மாரியப்பனின் தலையிலும்இடது பக்க விலாவிலும் அடித்தார் என்றும் இதனால் மாரியப்பனுக்கு இடது பக்க நெற்றியில் இரத்த காயமும் இடது பக்க விலாவிட்ல

ஊமை காயமும் ஏற்பட்டது என்றும், நாங்கள் சண்டையை விலக்கி விட்டோம் என போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரியை காப்பாற்ற வேண்டி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை -</u>**

இல்லை.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இராஜபாளையம்.

**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, RAJAPALAYAM**
**(CHAPTER XXIII CODE OF THE CRIMINAL PROCEDURE)**
**CC 163/2016**
**01-07-2026**
**Deposition of Witness fro : P.W.1**

| Name : | மாரியப்பன் | Village | |
|---|---|---|---|
| Father's /Husband Name : | சங்கிலியாண்டி | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Act 44 of 1969) of the day of **:01-07-2026**

(எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

**அரசு தரப்பில் முதல் விசாரணை –**

நான் சேத்துாரில் வசிக்கிறேன். ஆட்டோ ஓட்டுகிறேன். கடந்த 13-11-2015 அன்று சேத்துாரில் பஸ்நிலையம் முன்பு அனிதா மினி பஸ் டிரைவர் சாமிராஜ் காலை 10 மணி அளவில் சாமிராஜ், பாண்டி எனும் ஆட்டோ காரரின் நெஞ்சில் மிதித்து தள்ளி விட்டு பாண்டியின் கழுத்தின் மீது ஏறி உட்கார்ந்து பாண்டியை அடித்து கொண்டிருந்தார். நான் சென்று விலக்கி விட்டேன். அன்றைய தேதியில் மாலை 4.30 மணி அளவில் தளவாய்புரம் பஸ் நிலையம் முன்பு நான் ஆட்டோவில் உட்கார்ந்து இருந்தேன். அப்போது மினி பஸ் ஓட்டுநர் சாமிராஜ் என்னை பார்த்த உடன் மினி பஸ்சை நிறுத்தி விட்டு கடப்பாறைக்கு சமமான கம்பியால் என் கையில் அடித்தார். நான் ஆட்டோவை விட்டு இறங்கிவிட்டேன். 2 வது அடி எனது விலாவில் அடித்தார் 3 வது அடி எனது இடது நெற்றியில் அடித்தார். அவர் அடித்ததில் எனக்கு நெற்றியில் எலும்பு முறிவு ஏற்பட்டது. பல் உடைந்து விட்டது. சாமிராசை பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட முடியும். அப்போது ஆட்கள் வரவும் சாமிராஜ் அங்கிருந்து ஓடிவிட்டார். நான் காயத்துடன் காவல் நிலையம் சென்று புகார் மனு கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **புகார் மனு அ.சாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என்னை எனது ஊர்க்காரர்கள் ஆட்டோவில் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தார்கள். அங்கிருந்து மதுரைக்கு மேல் சிகிச்சைக்கு 108 ஆம்புலன்சில் சென்றேன். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) நான் சொந்தமாக ஆட்டோ வைத்து தொழில் செய்து வருகிறேன் என்றால் ஆம். பாண்டிக்கும், சாமிராசுக்கும் சம்பவம் நடைபெற்றதாக சொல்லும் இடம் சேத்துார் ஆகும். சாமிராசுக்கும் , பாண்டிக்கும் சம்பவம் நடைபெற்ற பின் நான் அந்த இடத்திற்கு சென்றேன் என்றால் விலக்கி விட சென்றேன். எனக்கும் எதிரிக்கும் எந்த முன் பகையும் கிடையாது என்றால் சரி.

2) அன்றைய தேதியில் மாலை 4.00 மணிக்கு நடைபெற்றதாக சொன்ன சம்பவம் தளவாய்புரம் பஸ்நிலையம் முன்பு ஆனந்தா டீ கடை முன்பு நடைபெற்றது. நான் சம்பவத்தின் போது நான் ஆட்டோவில் உட்கார்ந்து இருந்தேன் என்றால் சரி. சம்பவம் நடந்த உடன் காவல் நிலையத்தில் நேரடியாக சென்று புகார் கொடுத்தேனா என்றால் நான் காயம்பட்ட உடன் நேரடியாக காவல் நிலையம் சென்று விட்டேன். மறுநாள் வக்கீல் வந்து நான் காவல் நிலையம் செல்ல முடியாததால் நடந்த விபரங்களை கேட்டு விட்டு புகார் எழுதி கொடுத்து விட்டார். நான் கொடுத்த புகாரை போலிசார் தான் வந்து எழுதினார்கள். புகார் மனு காவலரால் எழுதப்பட்டதால் அதில் என்ன எழுதியுள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. எனக்கு படிக்க தெரியாது. நான் மருத்துவமனையில் இருந்த போது போலிசார் வந்து விபரம் கேட்டு எழுதி சென்று விட்டார்கள். நான் எதிரியை பழிவாங்கும் எண்ணத்தில் பொய் புகார் கொடுத்து உள்ளேன் என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இராஜபாளையம்.